செ.வெ.எண்.483/2021 நாள் : 27.10.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் சார்பில் வடகிழக்கு பருவமழை காலங்களில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அலுவலர்களுடன் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் சார்பில் வடகிழக்கு பருவமழை காலங்களில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அலுவலர்களுடன் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் மழைநீர் வரத்து கால்வாய்களை தூய்மைபடுத்த வேண்டும். மேலும் மழைநீர் கால்வாய்கள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களில் அடைப்பு ஏதும் ஏற்பட்டாதவாறு தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும். அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பேரிடர் கட்டுப்பாட்டு அறைகள் அமைத்து 24 மணிநேரமும் பொது மக்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் மீது உடனடியாக சரிசெய்ய வேண்டும். மேலும் குறிப்பாக ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி ஏரிகள், அணைகளுக்கு அருகேவுள்ள பகுதிகளை தீவிரமாக கண்காணிக்க வேண்டும். நமது மாவட்டத்திலுள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள பொது மக்களை பாதுகாப்பான இடத்தில் தங்கவைத்து அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்துகொடுக்க வேண்டும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 5 தன்னார்வளர்களுக்கு மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சார்பில் மீட்புப்பணிகள் குறித்து பயிற்சி வழங்கப்பட்டு அவர்களை தாயார்படுத்தபட வேண்டும். இப்பணிகளில் மாவட்டத்திலுள்ள 208 ஊராட்சி மன்ற தலைவர்கள் அனைவரும் பேரிடர் காலங்களில் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் மழைகாலங்களில் மரங்கள் ஏதும் சாலைகளில் விழுத்திருந்தால் அதனை ஒருமணி நேரத்திற்குள் சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளின் நீர்வரத்து கால்வாய்களையும், ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் கட்டுபாட்டில் உள்ள ஏரிகளின் நீர்வரத்து கால்வாய்களை உடனடியாக தூர்வாரி தண்ணீர் தடையில்லாமல் செல்ல பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

நமது மாவட்டத்திலுள்ள நகராட்சிகள், ஊராட்சிகள், பேரூராட்சிகள் ஆகிய பகுதிகளிலுள்ள கழிவுநீர் கால்வாய்களை உடனடியாக தூய்மை செய்ய வேண்டும். அனைத்து பகுதிகளிலும் எங்கும் மழைநீர் தேங்காதவாறு தீவிரமாக கண்காணிக்க வேண்டும். திருப்பத்தூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழையினை எதிர்கொள்ள அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் மொத்தம் 49 ஏரிகள் உள்ளன. நமது மாவட்டத்தில் தற்போது வரை கிடைத்த மழையினால் 25 சதவிகத்திற்கு குறைவாக 05 ஏரிகளிலும், 50 சதவிகத்திற்குள் 01 ஏரியிலும், 75 சதவிகத்திற்குள் 01 ஏரியிலும், 02 ஏரிகளில் முழு கொள்ளளவு தண்ணீர் நிரம்பியுள்ளது. மேலும் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள ஆண்டியப்பனூர் அணையின் மொத்த கொள்ளவான 26.24 அடிகளும் நிரம்பி முழு கொள்ளவை எட்டியுள்ளது. அதேபோல திருப்பத்தூர் மாவட்டத்தில் மொத்தம் 285 ஏரிகளும், 269 குளம், குட்டைகளும் உள்ளன. இவற்றில் 24 ஏரி குளம் குட்டைகளில் முழுமையாக நீர் நிரம்பியுள்ளது, 45 ஏரி குளம் குட்டைகளில் 75% நீர் நிரம்பியுள்ளது, 41 ஏரி குளம் குட்டைகளில் 50%க்கு கீழ் நீர் நிரம்பியுள்ளது 132 ஏரி குளம் குட்டைகளில் 25%க்கு கீழ் நீர் நிரம்பியுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட பொம்மிகுப்பம் ஏரி, சின்னமனபுதூர் ஏரி, மடப்பள்ளி ஏரி, ஜடயனூர் ஏரி, பெருமாப்பட்டு ஏரி, குரும்பேரி, சின்னசமுத்திரம் ஏரி, சின்னசமுத்திரம் வெள்ளேரி, செலந்தம்பள்ளி ஏரி, கனமந்தூர் ஏரி, கேனேரிகுப்பம் ஏரி, வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட பள்ளிப்பட்டு ஏரி, உதயேந்திரம் ஏரி, துளசிப்பை ஏரி, ஆம்பூர் வட்டத்திற்குட்பட்ட வின்னமங்கலம் ஏரி, பெரியான்குப்பம் ஏரி, சானான்குப்பம் ஏரி ஆகிய 17 ஏரிகள் நிரம்பிவுள்ளது. எனவே மேற்குறிபிட்டுள்ள ஏரிகளுக்கு அருகே வாழும் பொது மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுகொள்ளப்படுகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை, நாட்றம்பள்ளி, கந்திலி, ஆலங்காயம், மாதனூர், திருப்பத்தூர் ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒருநாளுக்கு குறைந்தபட்சம் 1500 வீதம் 9000 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அனைத்து பகுதிகளிலும் வாழும் பொது மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை அடைய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.கி.பாலகிருஷ்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.செல்வராசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.வில்சன்ராசசேகர், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.விஜயன், திருப்பத்தூர் சார் ஆட்சியர் (பொறுப்பு) திருமதி.பானு, வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்திரி சுப்பிரமணியன், நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு திரு.லோகநாதன், அனைத்து வட்டாட்சியர்கள், அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**